1239

உ

முருகன் துணை.

3-SEP 192

# கொள்ளிடத்தின் உடைப்பினால் ஏற்பட்ட பரிதாபச்சிந்து.

## இரண்டாம் பாகம்.

---

M. K. P. M. ம ... னர் மாணாக்கர்

வை. தர்மலிங்கநாயனர் குமாரன்



குமரவேல் நாயனர் இயற்றியதை,

---

... பிரஸில்," பதிப்பிக்கப்பெற்றது

1924 விலை 6 பை.

O-, IMKN, k
N24
18025

உ

முருகன் துணை.

## வெண்பா

கொள்ளிடமுங் காவேரியுங்—கூடஉப்பாறுடனே
வெள்ளம் விந்தைதனை விள்வதற்கு—உள்ளமதில்
சிந்து பல பாவினங்கள் சேர்த்தெழுதப் புத்தகத்தில்
தந்தி முகாவந்தருளேத்தா—

அதிசயம் [illegible] மழை பெய்த
அற்புதம் கேளீர்.

## அனுபல்லவி

சதிமயமாஎங்கும் சண்டன்போல் பொன்னிமுன்
பதிவிட்டுஎழைகள் பரிதாபமுரச்செய்த (அதி)

## சரணங்கள்.

1. மலைதனில் மழை பெய்ய—வதிக ஜலமதாச்சு
மதிப்பிடலாகாமல்—மனிதற்கிதுவே பேச்சு
கடல் திரண்டதுபோலே—காவேரி கரையாச்சு
கண்டோர் மனமெல்லாம்—கலங்கினதிகில்மீச்சு
கஷ்டமுண்டாச்சு—வெள்ளத்தார் சிலவூர்கள் நஷ்
[டமதாச்சு

2. பொன்பட்டணம்இல்லா பொதுப்படசொல்கிறேன்
புகழும் திருச்சிராப்—பள்ளிஎன் புகல்குறேன்
சிந்தாமணிக்கு வெள்ளஞ்—சீறினவிள்குறேன்

ஸ்ரீரங்கம் பவானி—சிறப்பெல்லாம் நல்குரேன்
வந்துதாம் வெள்ளம்—கொள்ளிட மதகையும்
[உடைத்ததாம் மெள்ள

3. கொள்ளிட மதகுமே—இரண்டாய் வெடித்ததாம்
கூச்சலிட்டு ஜலம்--குமளி பிரண்டதாம்
அண்டைக்குடிபக்கம்—ஆறும் முடைந்ததாம்
அணைக்கறை பக்கமே—அதிக வெள்ளமாகுதாம்
உருகுதாமுள்ளம் ஊரைவிடாமலே பெருகுதாம்
[வெள்ளம்.

4. ஆணுடன் பெண்களும்--அழுதுமடிந்தாரே
ஐயையோ வென்செய்வோ—மென்றுவழுதாரே
ஆடுமாடுகளுடன்—அடியோடு மிதந்ததாம்
ஆகாயினி வெள்ளம்—அடைக்க முடியாதென்றார்
அடித்தது பாரு—ஆனல் பெரும் வெள்ளம் வரு
[வது நேரு.

நோண்டிச்சிந்து

பாரடி பெண்மயிலே பனைமங்கலம் பண்புள்ள உப்பனாற்றின் உடைப்புதனை – உற்று நீ பாரு இங்கே உறைக்கின்ரேனே பெரும் உடைப்பிதுதான் – கெட்டியான ரெயில்வேலயன்தனில் புகுந்து சட்டமதாய் போகும்வெள்ளம் இஷ்டதாக–அலைகடல்போல்கிளம்பி வெள்ளம் பிரண்டு – அலங்கோலம் செய்ய சிலர் மனது

நொந்து — மாடாடுதான் மிதந்து போகும் பாவங்கள்— மானிலத்தில் கண்டதில்லை இதையறிந்து — பயிர் செய்யும் குடிகளெல்லாம் ஐயையோவென்று — பதறியே கீழ்விழுந்து கதறியழ அவ்வுடைப்பைத் தானடைக்க அதிவிரைவில் — அறந்தாங்கியிலிருந்து ஆள்கள் வர — அடைக்க முடியாமல் அலையடித்து — பிரளய காலம் போல் கடலை நோக்கி — போகும் ஜலமதனை கலெக்டர்— பொட்டெனவே வந்தடைத்தும் முடியாதென்னுர் — வருகுது பார் வெள்ளம் ஊரை விடாமல் — வைத்தீஸ்வரன் கோவிலை வளைத்துக்கொண்டே — தந்தினமதன [தனஞ

காணவேணும் காணவேணும் என்ற மெட்டு.

1. வைத்தியநாதர் நகரில் போக — ஜனம்
வாயிலும் வயிற்றிலறைந்தேக — வெள்ளம்
வாயினுர் சொல்ல முடியா நேரிநீல் சென்று புதுர
வாசம் செய்த உல்லாசம்.

2. சேரியிலுள்ள ஜனங்கள் எல்லாம்—ஒரு
மேட்டின்மேல் வந்தேறினதே மெள்ள—வெகு
சொத்துடன் மாடாடுகளை பத்திரமாய்காற்பதற்கு
சேர்த்தார் உயிர் காத்தார்

3. குத்தும் உரல் உலக்கை மறந்தார்—குதிரில்
கொட்டி வைத்த தானியத்தை இழந்தார் — பாவம்

கூ கூவென்று சத்தமதை மேவிஇதோ கேட்கிறது
கேளாய் இன்னும பாரய்.

4. வைத்தியநாதர் கோவிலில் புகுந்து—செய்யும்
வதிசிபத்தை கேட்க மனம் கசிந்து—ஐயோ
வைபகத்தில் கண்டதில்லை வாயளவு வந்த ஜலம்
மதிகம் மகா பெருக்கம்.

5. விதை விதைத்த பயிர் களெல்லாம்போச்சு—வெகு
வீணான நஷ்டங்களுமுண்டாச்சு —விதையை
வீணுக் கொட்டி விட்டோ மென்று பாரினில்
[மனம் திகைத்து
பதற மனம் கதற.

6. வெள்ளங் கண்டு வெகு ஜனங்கள் மீறி—தப்பி
வேகமதாய் மாயவரம் கோறி—வந்து
வாடியே யுயிர் பிழைத்து நாடியே யிருப்போ
[மென்று
வாறார் மனந் தேறார்.

7. காணுது பார் இன்னுமொரு ஊரு அதுகள்பார் பா
[பாகுடி என்பதுவும் சீரு
கட்டு குறை ஊரை சுத்தி கொட்டியாய் இருக்கி
[யுமே காலம் இல்லை விசாரம்

8. கன்னியாகுடி பக்கத்தில் வெள்ளம் லயனை கட்டு.
[ட்டுனே பேர்த்ததுபார் வெள்ளம்

காகங்களும் மேல் பறக்க மாகையைபோல் தான்
[பிரண்டு போக ஜலம் ஏக

9. ரக்தாக்ஷி வருஷமதில் வந்து—வெள்ளம்
ராதாம்பூரில் வாழும் ஜனம் நொந்து—சீவன்
ராப்பொழுதில் போகுமென்று பார்த்துமே வய
ரானர் பயம் போனர். [ரெறிய

10. மானே யான் சொல்குபவை கேளும்—மனே
ரஞ்சிதமாம் என் குருவின் பேரு—மிக்க
மர்மமும் வைக்காமல் என்மேல்தர்மம்போல் இரு
பாரு வழி தேரு. [ப்பாரென்று

தில்லாலே டப்பா என்ற மெட்டு.

1. வடக்கு தெற்கேகும் ரெயில்வழியதுவும் தெரியாமலே
கிடக்குதுபார் பெண்மயிலே சீர்காழி மாயவரம்
கெட்டதுபாரு வழியும் தட்டுதுநேரு

2. ஆனே தாண்டவபுரத்தினருகிலுள்ள பெருமடைப்பை
பார்த்ததுவுடன் தந்திசொன்னர் பக்ஷமுடன் டீடீயஸ்க்கு
பார்க்கலுற்றராங் காதில் கேட்கலுற்றராம்

3. பேர்பெருகும் டிராபிக்கு மானேஜர் துரையவரும்
காதலாய் கலெக்டருடன் கலந்துவந்தார் மாஜிஸ்ட்ரேட்டும்
வேகமதாக தனிரெயில் மாயமாயேக

4. போலீஸ்காரருடன் போதுமான வேலையாளும்
எஞ்சிடன் கூப்பிரண்டார் ஏகமாககூடினராம்
எட்டுனாக லயனே கட்டுக்கோப்பாக

5. உடைப்பு தனையுற்றுநோக்க உல்லாசமாய்த்திரண்டு
நடக்கிறர் பார்லயனதனில் நாவினாலே சொல்லலாகா
நாடியேவாரார் ஜனங்கள் ஓடியேவாரார்

6. ஆனை தாண்டாபுத்தினருகிலுள்ள ஆற்றுரோறத்தில்
நாகைநகரிலுள்ள நற்படகுவந்தவிதம்
நோக்கவிச்சையே இன்னம் பார்க்காவிந்தையே

7. வீணில்சனம் மடியுதென்று விரைவுடனே சேவகரும்
சாக்ஷியாதன்மமென்று தானுய்போனார் ஜனத்தையேற்ற
சரேற்றுறேன் கேளு போலிஸ்மாஸ்டரும்பேரு

8. காரை நாகைதனிலிருந்து கட்டுமரம் வந்துருக்கு
நீரைப்பிளர்ந்துசென்று பலதிக்கிலும் ஜனத்தையேற்றி
வருகுதாண்பாரு ஜனங்கள் பரிதாபத்தைகூறு

9. சாங்கிரசில் இருந்துகொண்டு சஷ்டபட்டுசேர்த்த
காசைப்பாங்காக ஏழைகளுக்கு பக்ஷமுடன்எட்டு
நாளாய்பந்தியும் வைத்தார் கூட சஞ்சியும்வார்த்தார்

10. ஆயிரத்துளாயிரத்து ஆனயிருபத்துநான்கு
ஆண்டதனில்ஜூலை மாதமான யிருபத்தாரந்தேதி
நேர்ந்ததுவெள்ளம் அதைநினைத்திரு உள்ளம்

11. தர்மம்செய்யசிலர்கள் தன்புடனே ஏழைகட்கு
பாரராய் அன்னம்வடித்து பந்திபைப்போலசெய்கிறார்கள்
பார்த்துமேவாரூர் சாதம்கேட்டுமேவாரூர்

12. கொள்ளிடத்து உடைப்பைபார்க்க கூத்நூர்துரைகலெக்டரும்
நன்மையாய் ஓடமதில் நாடியேரிபோகலுற்றார்
நாட்டமதாக போகுது ஓட்டமதாக

13. உடைப்புதனைப்பார்த்து ஓகோகோ வாரேமென்று
ஆனை தாண்டவபுரத்திற் கனுப்பினாராம் தந்திதனை
ஆளுமே ஓடத்தினி கூடவே நாட

14. கொள்ளிடத்தின் உடப்பைபார்த்து கூறும் துரைகலெக்ட
கன்னிபாகுடிபக்கமதில் நிலைகெட்டுதவிக்கலுற்றார் (ரும்
கட்டுனார்பாரு இரவில் நிற்பதும் சீரு

15. துரைவருவாரென்றுசொல்லி துரிதமுடன் துரைசாணிய
பார்க்குறாள் துரையவரை பஞ்செழும்பகண்கரெண்டும்[ம்
பதரவேலாணுல் மனம் கதரவேலாணுள்

16. தங்கிவந்த துரையவரும் தத்தளித்துமனம் கலங்கி
மற்றானுள் காலையினில் மாவேகமாய் வருகுறாராம்
மாயமாய்ஓடி வாரார்உபாயமாய்நாடி

17 கட்டுமரம்படவுமாக கலந்துகிடக்கிறதைகண்டால்
கடல்கரை என்பார்க்காதலியே இங்கே என்று
கண்டதில்லை இவைகள் வந்ததில்லையே

18. நீடேர்செய்வாசல்தனில் நேர்மையுள்ள குமரவேலாய்
பாடிவந்த பாடலில் பிழையிருந்தால் பொருக்கவேணும்
பாக்கியவானே உங்கள்பாதம் பணிந்தேனே

வெண்பா.

பாலன்குமரவேலின் பாடிவரும்புத்தகத்தை
ஆவலுடன்யாரொருவன் அச்சிடுவோன்—காலமெல்லாம்
எந்தன்மனையில் பிறந்து இயற்கையுடனேவளரும
சொந்தமகனென்றவனைச்சொல்

சுபம்! சுபம்!! சுபம்!!!